People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org


மார்ச் 25, 2010

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்
சென்னை 600 009

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 14 ஆண்டுகளாக, தமிழக அளவிலும் 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும் மனித உரிமை காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்தும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 14.3.2010 முதல் 20.3.2010 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | - |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 2 |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 53 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 5 |
| 5. | வகுப்பறை வன்முறை | 3 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 4 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 5 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 2 |
| 9. | கொத்தடிமை | - |
| 10. | பெண் சிசு கொலை | - |
| 11. | குழந்தை திருமணம் | 1 |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 13 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | - |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | 1 |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | 1 |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 4 |
| 17. | மணல் கொள்ளை | 6 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | - |
| 19. | பொதுவானவை | 2 |
| | மொத்தம் | 102 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். இத்துடன் சம்பவச் சுருக்கத்தையும் இணைத்துள்ளோம். மேலும் இத்துடன் காவல்நிலைய விசாரணைக்கு அழைத்துச்சென்ற கிருஷ்ணமூர்த்தி மரணம் குறித்த வழக்கு ஒன்றையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

## *காவல்நிலைய விசாரணைக்கு அழைத்துச்சென்ற கிருஷ்ணமூர்த்தி மரணம்*

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், புதுக்கருவாச்சி கிராமம், பிள்ளையார்கோவில் தெருவில் வசித்து வந்த மாணிக்கம் என்பவரின் மகன் கிருஷ்ணமூர்த்தியை (வயது 60) கண்டாச்சிபுரம் காவல் நிலையக் காவலர்கள் 16.3.2010 அன்று மதியம் 12.30 மணியளவில் அவரது குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு விசயமாக விசாரணை செய்ய வேண்டும் எனக் கூறி அவரது வீட்டிலிருந்து அவரை டாடா சுமோ வண்டியில் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

மதியம் சுமார் 2.00 மணியளவில் கண்டாச்சிபுரம் காவல் நிலையத்திலிருந்து காவலர்கள் கிருஷ்ணமூர்த்தியின் மகன் சீனுவை தொலைபேசியில் அழைத்து அவரது தந்தை காவல் நிலையத்திலிருந்து தப்பிச் சென்றுவிட்டதாகவும், மேலும் அவர் காவல் நிலையத்திலிருந்து 500 மீட்டர் தொலைவில் உள்ள டான்போஸ்கோ ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் பின்புறமுள்ள புளியமரத்தில் தூக்குப் போட்டு இறந்து கிடப்பதாகவும் தகவல் அளித்துள்ளனர்.

காவல் நிலைய விசாரணைக்கு அழைத்துச் சென்று சித்திரவதை செய்ததில் கிருஷ்ணமூர்த்தி இறந்துள்ளார் என்பத எங்களது கள ஆய்வின் மூலம் தெரிய வருகிறது. கண்டாச்சிபுரம் காவலர்களே அவரது உடலைப் புளியமரத்தில் கட்டித் தொங்கவிட்டுவிட்டு, அவர் தூக்குப் போட்டு இறந்ததாகக் பொய் வழக்குப் பதிவு செய்துள்ளதாக பொது மக்கள் வாக்குமூலம் அளிக்கின்றனர்.

எனவே, இச்சம்பவம் அடிப்படையில் கண்டாச்சிபுரம் உதவிக் காவல் ஆய்வாளர் பாலசுப்பிரமணியம் மற்றும் பணியில் இருந்த காவலர்கள் மேல் விசாரணை நடத்தி அவர்கள் மேல் சட்ட மற்றும் துறை வாரியான நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

**(ஹென்றி டிபேன்)**
நிர்வாக இயக்குநர்

நகல்கள்:

தமிழகத் துணை முதல்வர்
தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்
அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்
தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்
அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்
அனைத்து மனித உரிமை ஆணையங்கள்
அனைத்து அரசியல் கட்சிகள்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு
## 14.03.2010 முதல் 20.03.2010 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 805. | 14.3.2010 | **நாகை மாவட்டம்:** திருத்துறைப்பூண்டி மேலமருதூரைச் சேர்ந்த தங்கபாலு (29). மனைவி மாரியம்மாள் (29). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் நகை, பணம் கேட்டு துன்புறுத்துவதாக மாரியம்மாள் காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | திருமுகம் தினகரன் (24–2–10) |
| 806. | 14.3.2010 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் அடுத்த கருகம்பத்தூர்பாட்டைத் தெருவைச் சேர்ந்த சேட்டு(42) மகள் கவிதா(18). அதே பகுதியைச் சேர்ந்த ராஜ்குமார் கடத்தியதாக சேட்டு காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் தினமலர் (27–2–10) |
| 807. | 14.3.2010 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் அருகே அரியூர் அடுத்த வீராரெட்டிபாளையத்தைச் சேர்ந்த ராஜம்மாள்(35). தனது நிலத்தை அடகு வைத்து கடன் வாங்கியிருந்தார். நிலத்தை மீட்க முடியாததால் மனமுடைந்த ராஜம்மாள் தீக்குளித்து தற்கொலை. | கந்துவட்டி கொடுமை & வறுமை பெண்கள் மீதான வனமுறை | பாஸ்கர் தினமலர் (27–2–10) |
| 808. | 14.3.2010 | **வேலூர் மாவட்டம்:** சத்துவாச்சாரி ரங்காபுரத்தைச் சேர்ந்த அந்தோணிராஜ்(38) மனைவி ப்ளோரா(37). கணவன் மனைவி குடும்ப தகராறில் ப்ளோரா தூக்குப் போட்டு தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் தினமலர் (27–2–10) |
| 809. | 14.3.2010 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் அடுத் விருதம்பட்டு காமராஜர் நகரைச் சேர்ந்த பத்பநாதன் மகள் கவிதா (32). அதே பகுதியைச் சேர்ந்த பன்னீர்செல்வம் (36). இருவரும் காதலித்து பிரிந்தனர். தன்னை திருமணம் செய்ய கவிதா மறுத்ததால் ஆத்திரமடைந்த பன்னீர்செல்வம் கவிதா மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் தினமலர் (27–2–10) |
| 810. | 14.3.2010 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் விருதம்பட்டையைச் சேர்ந்த அபூல் உசேன்(30) மனைவி ஆயிஷா(24). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்தியதாக ஆயிஷா புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் தினமலர் (28–2–10) |
| 811. | 14.3.2010 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி பஷிராபாத் பகுதியைச் சேர்ந்த முகமது | அரசு மருத்துவமனை | பாஸ்கர் தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உசேன் மனைவி வாஜிதா(23). வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தை பிறந்தது. இந்நிலையில் மருத்துவர்களின் அலட்சிய போக்கினால் வாஜிதா இறந்ததாக பொதுமக்கள் புகார். | அலட்சியம் | (28–2–10) |
| 812. | 14.3.2010 | **வேலூர் மாவட்டம்:** ராணிப்பேட்டை மண்டித்தெருவைச் சேர்ந்த பத்மநாபன்(25) மனைவி அன்னபூரணி, கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்தியதாக அன்னபூரணி காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் தினமலர் (28–2–10) |
| 813. | 14.3.2010 | **வேலூர் மாவட்டம்:** காட்பாடி கழிஞ்சூர் ஈ.பி.காலனிப் பகுதியைச் சேர்ந்த செல்வராஜ்(48) மனைவி ஜான்சிலட்சுமி(41). கணவர் ராணுவத்தில் பணியாற்றி வருகிறார். தன் கணவர் செல்வராஜிடம் தொலைபேசியில் பேசியபோது குடும்பத்தகராறு ஏற்பட்டுள்ளது. மனமுடைந்த ஜான்சி தூக்குப்பேட்டு தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் தினமலர் (2–3–10) |
| 814. | 14.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** விஜயமங்கலம் கள்ளியம்புதுரைச் சேர்ந்த ஆறுமுகம் மனைவி கலா. கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த ஆறுமுகம் மனைவியை அரிவாளால் வெட்டியதாக கைது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | K. பெருமாள் காலைக்கதிர் (2.3.10) |
| 815. | 14.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** சத்தியமங்கலம் அடுத்துள்ள மேட்டுக்கடை அண்ணாநகரில் 500க்கும் மேற்பட்ட கிராம மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களின் மயானத்தை சிலர் ஆக்கிரமித்ததாக கூறி பிணத்துடன் மறியலில் ஈடுபட்டனர். | மயான ஆக்கிரமிபபு | K. பெருமாள் தினகரன் (2.3.10) |
| 816. | 14.3.2010 | **கோவை மாவட்டம்:** கோவை ராம்நகரைச் சேர்ந்த சுரேந்தர்சிங் மகள் தீப்மாலா கவுர்(30)க்கும் சென்னையைச் சேர்ந்த ரமேஷ்குமாருக்கும் திருமணம் நடந்தது. கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தினர் துன்புறுத்துவதாக தீப்மாலா கவுர் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | K. பெருமாள் தினகரன் (2.3.10) |
| 817. | 14.3.2010 | **நாகை மாவட்டம்:** வேதாரண்யம் அருகே போசில்தாவைச் சேர்ந்த சிவானந்தம் மனைவி சோனியா(25). தனது மகளை சிவனாந்தம் வரதட்சணை கேட்டு கொடுமைபடுத்தியதோடு விஷம் கொடுத்து கொன்றுவிட்டதாக சோனியா தந்தை புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | திருமுகம் தினகரன் (2–3–10) |
| 818. | 14.3.2010 | **திருப்பூர் மாவட்டம்:** தாராபுரம் | பெண்களுக்கு | K. பெருமாள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | டி.காளிபாளையத்தைச் சேர்ந்த அலாவுதீன்(30) மனைவி ஜெகிலா பானு(24). கணவர் மற்றும் குடும்பத்தார் வரதட்சணை கேட்டுத் துன்புறுத்துவதாக ஜெகிலாபானு புகார். | எதிரான வன்முறை | தினகரன் (3.3.10) |
| 819. | 14.3.2010 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் டவுன் ரயில் நிலையத்தில் இருந்து ஆந்திர மாநிலத்திற்கு கடத்தி செல்ல இருந்த 25 சிப்பங்களில் ஒரு டன் எடையுள்ள ரேசன் அரிசி சோதனையின் போது பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | பாஸ்கர் தினமலர் (3–3–10) |
| 820. | 14.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** வள்ளுவாகைப்பட்டியைச் சேர்ந்த குமரன் மகள் ராணி. அதே பகுதியைச் சேர்ந்த சரவணன் தனது மகளை திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி ஏமாற்றி கடத்திச் சென்றதாக குமரன் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | பாஸ்கர் தினமலர் (4–3–10) |
| 821. | 14.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** வள்ளளுவாகைபட்டியைச் சேர்ந்த ராஜா மகள் வேணி(17). அதே பகுதியைச் சேர்ந்த சதீஷ் தனது மகளை திருமணம் செய்து கொள்வதாக ஆசைவார்த்தை கூறி ஏமாற்றி கடத்திச் சென்றதாக ராஜா புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | பாஸ்கர் தினமலர் (4–3–10) |
| 822. | 14.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** அந்தியூர் கருங்கல்பாளையம் கந்தசாமி வீதியைச் சேர்ந்த சேக்முகமது மனைவி பாஜிலாபர்வீன் (26). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவன் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்தியதால் மனமுடைந்த பாஜிலாபர்வீன் சாணிபவுடர் குடித்துத் தற்கொலைக்கு முயற்சி. | பெண்களுக்கு எதிரான வன்முறை & தற்கொலை முயற்சி | K. பெருமாள் தினகரன் (4.3.10) |
| 823. | 14.3.2010 | **வேலூர் மாவட்டம்:** ஜோலார்பேட்டை அடுத்த காவேரிப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த குண்டுமணி(எ) ஆஞ்சி, மகன் அபினேஷ்(12). பள்ளி சென்று திரும்பிய அபினேஷை அடையாளம் தெரியாத நபர்கள் கடத்தியதாகப் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | பாஸ்கர் தினமலர் (5–3–10) |
| 824. | 14.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** பி.பெ.அக்ரஹாரம் ஜோசப் தோட்டத்தைச் சேர்ந்த விஸ்வநாதன் மனைவி சுமதி (32). விஸ்வநாதனின் அண்ணன் வேலு(38). நிலத்தகராறு தொடர்பான தகராறில் ஆத்திரமடைந்த வேலு சுமதியைத் கத்தியால் குத்தியதாக வேலு கைது. | பெண்களுக்கு மீதான வன்முறை | K. பெருமாள் தினகரன் (5.3.10) |
| 825. | 14.3.2010 | **வேலூர் மாவட்டம்:** திருப்பத்தூர் அருகே பஞ்சனம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த கோபி (27) மனைவி சுகந்தி(25). கணவன் மனைவி குடும்பத் தகராறில் | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் தினமலர் (5–3–10) |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | தடுக்க வந்த மாமியார் அம்மாயி(60)யை ஆத்திரமடைந்த கோபி கத்தியால் கழுத்தை அறுத்ததாக சுகந்தி புகார். | | |
| 826. | 14.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** படைவீடு அடுத்த ராமநாதபுரம் காலனியைச் சேர்ந்த ரமேஷ் மனைவி உமா. கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் துன்புறுத்தியதால் மனமுடைந்த உமா தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் தினமலர் (5–3–10) |
| 827. | 14.3.2010 | **நாகை மாவட்டம்:** சீர்காழி அருகே பூந்தோட்டத்தைச் சேர்ந்த ரவீந்திரன்(30) மனைவி மீனாம்பிகை(29). கணவர் தன்னை கூடுதல் வரதட்சணை கேட்டு அடித்துத் துன்புறுத்தி கொலை செய்வதாக மிரட்டல். மீனாம்பிகை புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை மிரட்டல் | திருமுகம் தினகரன் (5–3–10) |
| 828. | 14.3.2010 | **நாகை மாவட்டம்:** முத்துபேட்டை அடுத்த பலவேலிக்காடு கிராமத்தைச் சேர்ந்த சண்முகம் மனைவி லலிதா(35). துக்க நிகழ்ச்சிக்கு சென்று இரவு வீடு திரும்பும் பொழுது தில்லைவளாத்தில் பஸ் இல்லாததால் அவ்வழியாக வந்த லோடு ஆட்டோவில் ஏறினார் ஆட்டோ டிரைவர் பழனிவேல்(29 கிளீனர் ராமகிருஷ்ணன் (24), இருவரும் பாலியல் பாலாத்காரம் செய்ய முயன்றதாக லலிதா புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | திருமுகம் தினகரன் (5–3–10) |
| 829. | 14.3.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** வேப்பனப்பள்ளி அருகே நல்லூர் ஆற்றில் அனுமதியின்றி மணல் அள்ளிய லாரியை போலீஸார் பறிமுதல் செய்தனர். | மணல் கடத்தல் | செந்தில்ராஜா காலைக்கதிர் (6–3–10) |
| 830. | 14.3.2010 | **நாகை மாவட்டம்:** கொள்ளிடம் அருகே உள்ள அழக்குடியைச் சேர்ந்த மகாலிங்கம் மகள் கனிமொழி(24). கனிமொழியை காணவில்லை என பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை | திருமுகம் தினகரன் (6–3–10) |
| 831. | 14.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** சேத்துப்பட்டு பழம்பேட்டை பிள்ளையார் கோயில் தெருவைச் சேர்ந்த மாசி மனைவி குப்பம்மாள்(50). அதே தெருவைச் சேர்ந்த மோகன் குப்பம்மாளை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்ததாக கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை & கொலை | பாஸ்கர் தினமலர் (6–3–10) |
| 832. | 14.3.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** சூளகிரி அடுத்த பீர்பள்ளியைச் சேர்ந்த பால்ராஜ்(30) மனைவி கிரிஜா(20). கணவர் மற்றும் குடும்பத்தார் வரதட்சணை கேட்டுத் துன்புறுத்தியதால் மனமுடைந்த கிரிஜா தூக்குப்போட்டு தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா காலைக்கதிர் (7–3–10) |
| 833. | 14.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** ஒசூர் சிப்காட் அடுத்த மேட்ரப்பள்ளியைச் சேர்ந்த | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா காலைக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | புருஷோத்தமன்(28). மனைவி கவிதா(22). கணவன் மனைவி குடும்பத் தகராறில் கவிதாவை காணவில்லை என பெற்றோர் புகார். | | (7–3–10) |
| 834. | 14.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** கம்பைநல்லூர் அருகேயுள்ள பள்ளம்பட்டியைச் சேர்ந்த வளர்மதி(40). சித்தப்பா முருகன்(55). இருவருக்கும் நடந்த நிலத்தகராறில் ஆத்திரமடைந்த முருகன் வளர்மதியை திட்டியதோடு தாக்கியதாக வளர்மதி புகார். | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா காலைக்கதிர் (8–3–10) |
| 835. | 14.3.2010 | **நாகை மாவட்டம்:** மயிலாடுதுறை அடுத்த பூம்புகார் நெய்தவாசலை சேர்ந்த தவமணி மனைவி சீதாலட்சுமி(26). கணவன் மனைவி குடும்பத்தகராறில் ஆத்திரமடைந்த தவமணி சீதாலெட்சுமி மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீவைத்ததாக சீதாலட்சுமி வாக்குமூலம். | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | திருமுகம் தினகரன் (8–3–10) |
| 836. | 14.3.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** பாப்பிரெட்டிப்பட்டி அடுத்த ஏ.பள்ளிப்பட்டி அய்யாமலைஹள்ளியைச் சேர்ந்த பழனிசாமி மனைவி மலர்கொடி(30). அதே பகுதியைச் சேர்ந்த கண்ணையன் மனைவி வளர்மதி. இருவருக்கும் நடந்த தகராறில் ஆத்திரமடைந்த கண்ணையனும் அவரது மனைவி வளர்மதியும் தாக்கியதாக மலர்கொடி புகார். | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா காலைக்கதிர் (8–3–10) |
| 837. | 14.3.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** பாலக்கோடு அடுத்த சிக்கார்த்தனஹள்ளியைச் சேர்ந்த ஆறுமுகம் மனைவி மகேஸ்வரி(27). கணவன் மனைவி குடும்பத்தகராறில் மனமுடைந்த மகேஸ்வரி விஷம் குடித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா காலைக்கதிர் (8–3–10) |
| 838. | 14.3.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** சாகனூரில் இருந்து உப்பாரப்பட்டிக்கு மணல் கடத்தி வந்த 2 டிராக்டர் பறிமுதல். | மணல் கடத்தல் | செந்தில்ராஜா காலைக்கதிர் (8–3–10) |
| 839. | 14.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** பெரிய சடையம்பாளையத்தைச் சேர்ந்த சண்முகம் மகன் கார்த்திக்(21). அதே ஊரைச் சேர்ந்த 14 வயது பெண்ணை பாலியல் பாலத்காரம். ஊர் பஞ்சாயத்தில் அதே பெண்ணை திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்கு பிறகு அந்த பெண்ணை விரட்டியதாக தந்தை புகார். | குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறை & குழந்தைத் திருமணம் | K. பெருமாள் தினகரன் (9.3.10) |
| 840. | 14.3.2010 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை அருகே உடையனேந்தலைச் சேர்ந்த | பெண்கள் மீதான வன்முறை | O. ஆனந்குமார் தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வெள்ளையன் மகள் தமிழ்ச்செல்வி (20). அதே பகுதியைச் சேர்ந்த சார்லஸ்(20). இருவரும் காதலித்து வந்தனர். சார்லஸ் தன்னைத் திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தைக் கூறி ஏமாற்றியதாக தமிழ்ச்செல்வி புகார். | | (9–3–10) |
| 841. | 14.3.2010 | **சிவகங்கை மாவட்டம்:** மானாமதுரை நகரில் சுற்றித் திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய துப்புரவு தொழிலாளர்கள் கணேஷ்ராம் மாணிக்கம். சங்கர் நாய்களை பிடிக்க சென்றனர். சாஸ்தா நகரைச் சேர்ந்த முத்து, கண்ணப்பன் இருவரும் தங்கள் நாய்களை பிடிக்க கூடாது என கூறி துப்புறவுத் தொழிலாளியை மூவரையும் தாக்கியதாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை | O. ஆனந்குமார் தினகரன் (9–3–10) |
| 842. | 14.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** தர்மபுரி, பென்னாகரம், அரூர் பாப்பாரப்பட்டி, காரிமங்கலம் உள்ளிட்ட இடங்களில் அரசு சுகாதார நிலையங்களில் நோயாளிகள் அனுமதி சீட்டு வேண்டுமானால் ரூபாய் 2 கொடுத்து வாங்கும் நிலை உள்ளது. மேலும் அரசு மருத்துவமனையில் வழங்கும், ஊசி, மருந்துகள் வெளிமார்கெட்டில் விற்பனை. | மருத்துவமனை ஊழல் | செந்தில்ராஜா காலைக்கதிர் (10–3–10) |
| 843. | 14.3.2010 | **கோவை மாவட்டம்:** கோவை ராமநாதபுரத்தைச் சேர்ந்த கதிரேசன். புதுக்கோட்டையில் நிதி நிறுவனம் நடத்தி வரும் ராமலிங்கம், சீனிவாசன், சண்முகநாதன் ஆகியோரிடம் தனது தொழில் மேம்பாட்டுக்காக ரூ. 15 லட்சம் கடன் வாங்கியுள்ளார். பணத்தை திருப்பி கொடுத்தும் மீண்டும் கூடுதல் வட்டி கட்ட வேண்டும் என மிரட்டல். | கந்து வட்டிக் கொடுமை | K. பெருமாள் தினகரன் (10.3.10) |
| 844. | 14.3.2010 | **நீலகிரி மாவட்டம்:** மஞ்சூரை சேர்ந்த வெங்கடேஷ் தனது தங்கை திருமணத்திற்காக தமிழக அரசின் திருமண உதவித் தொகை ரூ.20 ஆயிரம் பெற சமுக நலத்துறை அலுவலர் சரோஜாவை அணுகினார். அவர் ரூபாய் 500 லஞ்சம் கேட்டதாக வெங்கடேஷ் புகார். | லஞ்சம் | K. பெருமாள் தினகரன் (10.3.10) |
| 845. | 14.3.2010 | **திருப்பூர் மாவட்டம்:** திருப்பூர் காங்கயம் ரோடு, ராக்கியபாளையத்தைச் சேர்ந்த அருண்குமார் மனைவி சித்ரா(25). இவர் திருப்பூர் தாராபுரம் ரோட்டில் உள்ள ஸ்டுடியோ ஒன்றில் வேலை செய்து வந்தார். போட்டோ எடுக்க வந்த இரு மாணவர்கள் | பெண்கள் மீதான வன்முறை | K. பெருமாள் தினகரன் (11.3.10) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சித்ராவின் கழுத்தை அறுத்து நகைகளை பறித்ததாக சித்ரா புகார். | | |
| 846. | 14.3.2010 | **கோவை மாவட்டம்:** கோவில்பாளையத்தைச் சேர்ந்த 5 வயது பெண் குழந்தை. அதே பகுதியைச் சேர்ந்த பக்கத்து வீட்டு 9ம் வகுப்பு படிக்கும் பையன் சிறுமியை பாலியல் பாலாத்காரம். மாணவன் கைது. | குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறை | K. பெருமாள் தினகரன் (11.3.10) |
| 847. | 14.3.2010 | **நாகை மாவட்டம்:** வேதாரண்யம் அருகே கோடியக்கரையில் அரசு உயர் நிலைப்பள்ளி உள்ளது. இங்கு 487 மாணவ, மாணவி படித்து வருவதாகவும் வகுப்பு நடைபெறும் கட்டிடத்தில் போதிய காற்று வசதி இல்லாததால் மாணவ, மாணவிகள் மயக்கம் அடைவதாக பெற்றோர்கள் புகார். | வகுப்பறை வன்முறை | திருமுகம் தினகரன் (13–3–10) |
| 848. | 14.3.2010 | **நாகை மாவட்டம்:** மணல்மேடு அடுத்த வில்லியநல்லூரைச் சேர்ந்த பிரபுதாசன்(30) மனைவி சுதா. குடும்பத்தகராறில் சுதா வீட்டில் விஷம் குடித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | திருமுகம் தினகரன் (13–3–10) |
| 849. | 14.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை வசந்த நகரைச் சேர்ந்த மைக்கேல்(24). மதுரை மாநகராட்சி வளாகத்தில் எக்கோ பார்க்கில் இருந்த பெண்களை கேலி செய்ததாக மைக்கேல் கைது. | ஈவ்டீசிங் & பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 850. | 14.3.2010 | **மதுரை மாவட்டம்:** அருப்புக்கோட்டையைச் சேர்ந்த முத்துக்காமாட்சி மனைவி மகாதேவி. கர்ப்பத்தின் போது இரட்டை குழந்தைகள் உருவாகியிருப்பதாக சிகிச்சை அளித்த டாக்டர் ஜெயராணி கூறினார். ஆனால் பிரசவத்தில் ஒரு ஆண் குழந்தை மட்டும் பிறந்தாக டாக்டர் காண்பித்தார். மற்றொரு குழந்தை குறித்து கேட்டபோது, டாக்டர் பதிலளிக்கவில்லை. இது தொடர்பாக போலீஸில் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என மகாதேவி மனு. | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலைய வன்முறை | தினமலர் |
| 851. | 14.3.2010 | **கோவை மாவட்டம்:** கோவை மாநகராட்சிக்குட்பட்ட பீளமேடு மேல்நிலைப்பள்ளியில் 10–ம் வகுப்பு படித்துவரும் தலித் மாணவ மாணவிகள் 12 பேருக்கு நிர்வாகம் எவ்விதமான காரணமும் இன்றி மாற்றுச் சான்றிதழ் கொடுத்து பள்ளியிலிருந்து வெளியேற்றியதாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை & வகுப்பறை வன்முறை | ஜனசக்தி |
| 852. | 14.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை சிறைச்சாலையில் தண்டனை | சிறைச்சாலை வன்முறை | தமிழ்முரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கைதிகளிடம் கஞ்சா, செல்போன், சிம்கார்ட், மதுபாட்டில்கள் போன்ற தடைசெய்யப்பட்ட பொருட்கள் புழக்கத்தில் உள்ளதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. போலீசார் சோதனையின் போது கைதிகள் பிடிபடுவதைத் தவிர்க்க கைதிகளின் செல்போன்களை வார்டன்களே வாங்கி மறைத்து வைத்து பின்னர் மீண்டும் கைதிகளிடமே ஒப்படைப்பதாக புகார். | & லஞ்சம் | |
| 853. | 14.3.2010 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ஆனந்தூர் அருகேயுள்ள பக்கத்தான்குடி கிராமத்தைச் சேர்ந்த பாண்டி மகள் கல்பனாதேவி(16). கல்பனாதேவியை அருள் என்பவர் கடத்தி சென்றதாகப் பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |
| 854. | 15.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை செல்லூர் பாக்கியநாதபுரம் அடுத்த பனைமேட்டுத் தெருவைச் சேர்ந்த லெட்சுமணன் மனைவி உமா மகேஸ்வரி(18). கணவன் மனைவி தகராறில் கர்ப்பினியான உமா மகேஸ்வரியை லெட்சுமணன் கொன்று தூக்கில் தொங்கவிட்டு, ரயிலில் விழுந்து லட்சுமணன் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 855. | 15.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு அருகே உள்ள முள்ளாம்பரப்பு செக்குமேடு பகுதியைச் சேர்ந்த ரேவதி(30). ரேவதியின் கணவர் இறந்ததால் மனமுடைந்த ரேவதி தனது 3 குழந்தைகளையும் கிணற்றில் வீசி விட்டு தானும் கிணற்றில் குதித்து தற்கொலை. | வறுமை & தற்கொலை | தினத்தந்தி |
| 856. | 15.3.2010 | **ராமநாதபுரம் மாவட்டம்:** திருப்புல்லாணி அருகே உள்ள ரெங்கநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த சேதுஉலகு (63). திருப்புல்லாணி பஸ் நிலையத்தில் நின்று கொண்டு பள்ளி செல்லும் மாணவிகளை கேலி, கிண்டல் செய்தும், ஆபாசாமாகப் பேசியதாகவும் கைது. | குழந்தைகள் மீதான வன்முறை | மாலைமலர் |
| 857. | 15.3.2010 | **வேலூர் மாவட்டம்:** பேரணாமபட்டு கிராமத்தைச் சேர்ந்த சனியுல்லா(35) இவரிடம் அதே பகுதியைச் சேர்ந்த சைபா 10–ம் வகுப்பு மாணவி டியூசன் பயின்று வந்தார். சனியுல்லா சைபாவை கடத்தி சென்றதாக பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | மாலைமலர் |
| 858. | 15.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** பென்னாகரத்தில் இருந்து கேரளாவுக்கு லாரியில் கடத்த முயன்ற 6டன் எடையுள்ள 124 மூட்டை ரேசன் அரிசி உடுமலை–குடிமங்கலம் | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அருகே அதிகாரிகள் சோதனையின் போது பறிமுதல். | | |
| 859. | 16.3.2010 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி அருகே குமரக்குடி காலனியைச் சேர்ந்த சந்திரன். கிராம தலைவர் அழகு சந்திரனக்கும் நடந்த தகராறில் சந்திரன் குடும்பத்தை ஊரைவிட்டு ஒதுக்கி வைத்தும். கணவன் மனைவி இருவருக்கும் நிர்வாண தண்டனை வழங்கியதாகவும் ஊர் கிராம தலைவர் அழகு மீது சந்திரன் புகார். | கட்டப்பஞ்சாயத்து சமூகப்புறக்கணிப்பு | தினமலர் |
| 860. | 16.3.2010 | **தூத்துக்குடி மாவட்டம்:** தூத்துக்குடி அருகே அக்கநாயக்கன்பட்டியைச் சேர்ந்த நாகராஜ்(45). தனது நிலத்திற்கு பட்டா மாற்றம் செய்யக் கோரி வி.ஏ.ஓ., சந்திரய்யா(54)வை அனுகினார் அவர் ரூபாய் 500 லஞ்சம் கேட்டதாக நாகராஜ் புகார். | லஞ்சம் | தினமலர் |
| 861. | 16.3.2010 | **தூத்துக்குடி மாவட்டம்:** தூத்துக்குடியிலிருந்து கப்பல் மூலம் குஜராத் மாநிலம் வழியாக துபாய்க்கு கடத்தப்படவிருந்த 60 லட்சம் ருபாய் மதிப்புள்ள, 290 மெட்ரிக் டன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தினமலர் |
| 862. | 16.3.2010 | **தேனி மாவட்டம்:** ஆண்டிப்பட்டி அருகே உள்ள திம்மரசநாயக்கனூர் கிராமத்தில் வசிப்பவர் சாமிநாதன் மகள் இந்து(14). உசிலம்பட்டி அருகே உள்ள தொட்டப்பநாயக்கனூரைச் சேர்ந்த சுமன் இந்துவை கடத்தி சென்றதாக சாமிநாதன் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | தமிழ்சுடர் |
| 863. | 16.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் தாலுகா சின்னசுரைக்காய்பட்டியைச் சேர்ந்த கார்த்திகேயன் மனைவி முத்துலெட்சுமி(28). கணவர் கார்த்திகேயன் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதாக முத்துலெட்சுமி புகார். | பெண்கள் மீதான வன்முறை | முனிராஜ் |
| 864. | 17.3.2010 | **தூத்துக்குடி மாவட்டம்:** விளாத்திக்குளம் தாலுகா கோடங்கிபட்டி கிராம அருந்ததியர் சமூக மக்கள். ஆதிக்கச் சாதியைச் சேர்ந்தவர்களால் தலித் மக்கள் அனைத்து வகையான பாகுபாடு காட்டிச் சித்திரவதை. | தலித்துகள் மீதான வன்முறை | முனிராஜ் |
| 865. | 17.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** தடாகம் அருகே RR நகர் கிராமத்தைச் சேர்ந்த மாரி. கணவர் மற்றும் மாமியாரால் வரதட்சணைக் கொடுமை. விருதுநகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் | பெண்கள் மீதான வன்முறை | முனிராஜ் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | புகார் கொடுத்ததால் கணவர் மற்றும் மாமியார் சித்திரவதை செய்து கொடுமை. | | |
| 866. | 17.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** திருச்சுழி தாலுகா இலுப்பையூரில் உள்ள தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதியில். தாழ்த்தப்பட்ட மாணவர்களை ஆதிக்க சமூக மாணவர்கள் அடித்துச் சித்திரவதை. | தலித் மாணவர்கள் மீதான வன்முறை | முனிராஜ் |
| 867. | 17.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை பசுமலை ஜோன்ஸ்புரம் 3வது தெருவில் வசிப்பவர் ராஜகோபால் மனைவி திவ்யா(20). தனது கணவர் தன்னை சந்தேகப்பட்டு கொடுமைப்படுத்தியதாக திவ்யா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 868. | 17.3.2010 | **கோவை மாவட்டம்:** நியூசித்தாபுதூர் வெங்கடசாமி வீதியைச் சேர்ந்த ராமச்சந்திரன் மகள் கமல வினோதினி(36). திருப்பூர் தெற்கு போலீஸ் ஸ்டேசனில் பணியாற்றும் ஏட்டு ரத்தினசாமி திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி ரத்தினசாமி ஏமாற்றியதால் மனமுடைந்த கமல வினோதினி தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 869. | 17.3.2010 | **மதுரை மாவட்டம்:** தத்தனேரி அசோக் நகரைச் சேர்ந்த சையது அலி(27) மனைவி ஜெய்லானி பேகம்(25). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக ஜெய்லானி பேகம் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 870. | 17.3.2010 | **விழுப்புரம் மாவட்டம்:** விழுப்புரம் அருகில் உள்ள கருவாட்சி கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி (55). அதே ஊரைச் சேர்ந்த ராஜசேகரை கொலைச் சம்பவ வழக்கில் கிருஷ்ணமூர்த்தி காவலர்களால் கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு அழைத்து சென்ற காவலர்கள் அடித்துக் கொலை. | காவல் நிலைய வன்முறை & கொலை | ஜெயா நியூஸ் |
| 871. | 18.3.2010 | **நெல்லை மாவட்டம்:** பாளையங்கோட்டை மத்திய ஜெயிலில் தண்டனை கைதிகள் மற்றும் விசாரணை கைதிகள் செல்போன் உபயோகப்படுத்தவதாக கிடைத்த தகவலின் படி சோதனை நடத்த சென்ற கமாண்டோ படையினருக்கும் கைதிகளுக்கும் இடையே நடந்த மோதலில் 2 கைதிகள் காயம் அடைந்தனர். | சிறைச்சாலை வன்முறை | தினத்தந்தி |
| 872. | 18.3.2010 | **மதுரை மாவட்டம்:** சோழவந்தானில் காமராஜர் நடுநிலைப்பள்ளியில் எழுத்துப்பயிற்சி, செயல்வழி கற்றல் | வகுப்பறை வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பயிற்சி புத்தகங்கள் வாங்க மாணவர்களிடம் 110 ரூபாய் முதல் 670 வரை வசூலித்ததாகவும், ஆனால் இந்த கல்வியாண்டிற்கு இதுவரை புத்தகங்கள் வழங்காததால் மாணவர்கள் படிப்பதில் தடை ஏற்பட்டதாக மாணவர்கள் போராட்டம். | | |
| 873. | 18.3.2010 | **நெல்லை மாவட்டம்:** குருவிகுளம் போலீஸ் ஸ்டேஷனில் ஏட்டாக பணியாற்றிய சத்தியமூர்த்தி (52). முறையாக பணி மேற்கொள்ளாததால் டிஸ்மிஸ் செய்யப்பட்டார். இவர் நெல்லை டவுன் பகுதியில் மாமூல் வசூலித்ததாக கடைக்காரர்கள் புகார். சத்தியமூர்த்தி கைது. | காவல்நிலைய வன்முறை & லஞ்சம் | தினத்தந்தி |
| 874. | 18.3.2010 | **கடலூர் மாவட்டம்:** பண்ருட்டியை அடுத்த தாழம்பட்டு கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியல் 400க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். மதிய உணவு சாப்பிட்ட மாணவர்களில் சிலருக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை. | பள்ளி குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 875. | 18.3.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** நத்தம் தாலுகா சாத்தம்பாடி மலைக்கிராமத்தைச் சேர்ந்த சீனிவாசன் மகள் லட்சுமி. சுமங்கலித் திட்டத்தின்படி மூன்று ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் காஞ்சிபுரம் அருகே நடராஜபுரத்தில் வேலைக்கு சேர்ந்தார். அங்கு கடினமான வேலை, மருத்துவ சிகிச்சை இன்மையால் லட்சுமி உடல்நலம் பாதிக்கப்பட்டு இறந்ததாக பெற்றோர் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை & சுமங்கலித் திட்டம் | தீக்கதிர் |
| 876. | 19.3.2010 | **சென்னை மாவட்டம்:** மாங்காடு சின்னமசூதி தெருவைச் சேர்ந்த சேக் முகமது மகள் சகிலாபானு (8). கடைக்கு சென்ற குழந்தையை சாக்லெட் வாங்கி தருவதாக கூறி ஒரு பெண் ஷகிலா பானுவை கடத்தியதாக புகார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 877. | 19.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னை இம்மானுவேல் என்பவர் அனாதை இல்லம் நடுத்துவதாக கூறி சிறுவர்களை அடைத்து வைத்து சித்திரவதை. மணிப்பூர் சிறுமிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததாக கொளத்தூர் தென்பழனி நகரைச் சேர்ந்த கிறிஸ்டோபர்(45) கைது. | குழந்தைகளுக்கு மீதானபாலியல் வன்முறை | தினகரன் |
| 878. | 19.3.2010 | **திருவள்ளுவர் மாவட்டம்:** கும்மிடிப்பூண்டி தேசிய நெடுஞ்சாலையில், அதிகாரிகளனின் வாகன சோதனையின் | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | போது கார் சீட்டுக்கு அடியில் பதுக்கி வைத்திருந்த 12 மூட்டை ரேசன் அரிசி பறிமுதல். நெல்லூரைச் சேர்ந்த டிரைவர் சூரியபாபு கைது. | | |
| 879. | 19.3.2010 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** தாம்பரம் அருகேயுள்ள சேலையூர் வெங்கடசாமி தெருவைச் சேர்ந்த ராமச்சந்திரன் (33) மனைவி ஈஸ்வரி (எ) அலமேலு (28). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியாதால் ஈஸ்வரி தூக்குப்போட்டு தற்கொலை. | பெண்களுக்கு எதிரான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 880. | 19.3.2010 | **கோவை மாவட்டம்:** எரிசனம்பட்டி பகுதியில் வாகன சோதனையின் போது கேரளாவுக்கு மணல் கடத்தி வந்த லாரி பறிமுதல். | மணல் கடத்தல் | தினகரன் |
| 881. | 19.3.2010 | **கோவை மாவட்டம்:** ஒடுக்கம்பாளையம் அருகே மணல் ஏற்றி வந்த லாரி பறிமுதல் லாரி டிரைவர்கள் ரமேஷ், ஈஸ்வரன் கைது. | மணல் கடத்தல் | தினகரன் |
| 882. | 19.3.2010 | **நிலகிரி மாவட்டம்:** வயநாடு அடுத்த மீனாட்சி காபி எஸ்டேட் பகுதியைச் சேர்ந்த உம்மர்(55). அருகில் வசிக்கும் 8 வயது சிறுமியை பாலியல் பாலாத்காரம் செய்ய முயன்றதாக கைது. | குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறை | தினகரன் |
| 883. | 19.3.2010 | **தூத்துக்குடி மாவட்டம்:** கோவில்பட்டி இளையரசனேந்தல் ரேட்டில் தனியார் கல்லூரி ஒன்றில் பேராசிரியர் பாடம் நடத்தி கொண்டிருந்தார். அப்பொழுது அவர் பாலியல் உணர்வை தூண்டும் வகையில் பேசியதாக மாணவிகள் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 884. | 19.3.2010 | **சேலம் மாவட்டம்:** சேலம் மத்திய சட்டக்கல்லூரியில் பி.,ஜி.எல். முதலாமாண்டு படித்து வருபவர் கதிரவன். மாணவர்கள் அனைவரும் ஏற்காட்டிற்கு சென்றனர் அங்கு லாரி டிரைவர் ஒருவருக்கு இவர்களுக்கும் எற்பட்ட தகராறில் சட்டக்கல்லூரி மாணவர் 5 பேர் போலீசாரால் தாக்கப்பட்டனர். | காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 885. | 19.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை வில்லாபுரம் பராசக்தி நகரைச் சேர்ந்த ராமராஜ்(43) மகன் பிரவீன்குமார் (8). ராம்ராஜிடம் வேலை செய்து வந்த வெங்கடேஷ், ஆனந்த், மனோபிரகாஷும் வேலையில் இருந்து நீக்கியாதல் ஆத்திரமடைந்த முவரும் பிரவீன்குமாரை கடத்தியதாக கைது. | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை & கடத்தல் | தினத்தந்தி |
| 886. | 19.3.2010 | **மதுரை மாவட்டம்:** கொட்டாம்பட்டியைச் சேர்ந்த சங்கர் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மனைவி சத்தியகலா(28). சங்கர் வெளிநாட்டில் வேலை செய்துவருகிறார். சத்தியகலாவின் நடத்தையில் சந்தேகப்பட்டு பாட்டி திட்டியதால் மனமுடைந்த சத்தியகலா தூக்குபோட்டு தற்கொலை. | & தற்கொலை | |
| 887. | 19.3.2010 | **புதுக்கோட்டை மாவட்டம்:** ஆவுடையார் கோயில் அருகேயுள்ள கீழ்க்குடியைச் சேர்ந்த ராமையா(70). மனைவி கமலா(42). கமலாவின் நடத்தையில் சந்தேகமடைந்த ராமையா மனைவியை அரிவாளால் வெட்டி கொலை செய்து தானும் விஷம் குடித்த தற்கொலை. | பெண்களுக்கு எதிரான வன்முறை & கொலை | தினகரன் |
| 888. | 19.3.2010 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமேஸ்வரத்தில் போக்குவரத்து காவல்துறை சார்பு ஆய்வாளர் நவநீதன். ஆட்டோ டிரைவர்களை அவமரியாதையாக பேசுவதாகவும் சம்பந்தப்பட்ட ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிஐடியு சங்கத் தலைவர் என்.பி.செந்தில் எஸ்.பியிடம் புகார். | காவல் நிலைய வன்முறை | தீக்கதிர் |
| 889. | 19.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே திருத்தங்கலைச் சேர்ந்த கண்ணன் மனைவி ராணி சீமா. கணவரால் சித்திரவதை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | முனிராஜ் |
| 890. | 20.3.2010 | **திருவள்ளூர் மாவட்டம்:** திருமழிசை எட்டியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த பாலாஜி மனைவி வரலட்சுமி(27). பக்கத்து வீட்டில் வசிக்கும் மதிவாணன்(39) மனைவி பாரதி(36). இருவருக்கும் நடந்த தகராறில் பாரதி மற்றும் மதிவாணன் தம்பதியினர் வரலட்சுமியை கல்லால் தாக்கியதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 891. | 20.3.2010 | **திருவள்ளூர் மாவட்டம்:** செங்குன்றம், பாடியநல்லூர், மாதவரம் பகுதிகளில் உப்பு கலந்த மணல் கடத்தப்படுவதாக புகார். வாகனச் சோதனையின் போது உப்பு கலந்த மணல் 200 லோடு பறிமுதல். | மணல் கடத்தல் | தினகரன் |
| 892. | 20.3.2010 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** சாலவாக்கம் பாலாற்றில் இருந்து அனுமதியின்றி மணல் ஏற்றி வந்த 2 லாரி பறிமுதல். லாரி டிரைவர் கோதண்டம் கைது. | மணல் கடத்தல் | தினகரன் |
| 893. | 20.3.2010 | **சிவகங்கை மாவட்டம்:** தேவகோட்டை அருகே ஆர்.எஸ். மங்கலம் இந்திரா நகரைச் சேர்ந்த வித்யாபவானி சந்தியா. இருவரும் சிவகங்கையில் | மாணவிகள் தற்கொலை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | விடுதியில் தங்கி பத்தாம் வகுப்பு படித்து வந்தனர். விடுதியில் இருந்து வெளியே சென்ற மாணவிகள் விஷம் குடித்துத் தற்கொலை. | | |
| 894. | 20.3.2010 | **மதுரை மாவட்டம்:** சேடபட்டியைச் சேர்ந்த சின்னான் மனைவி முருகேஸ்வரி(21). கணவன் மனைவி தகராறில் மனமுடைந்த முருகேஸ்வி தனது இரு குழந்தைகளுடன் தீக்குளித்ததில் இரு குழந்தைகள் இறந்தனர். முருகேஸ்வரி சிகிச்சை பெற்று வருகிறார். | பெண்களுக்கு எதிரான வன்முறை & குழந்தைகளுக்கு எதிரான வன்முறை & தற்கொலை முயற்சி | தினகரன் |
| 895. | 20.3.2010 | **மதுரை மாவட்டம்:** வில்லாபுரம் வீட்டுவசதி குடியிருப்பில் வசிப்பவர் கமலக்கண்ணன் மனைவி அனிதா. கணவர் நவமணி தன்னை துன்புறுத்துவதுடன் இரண்டாவது திருமணம் செய்து கொண்டதாக அனிதா புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 896. | 20.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே மிளகரணையைச் சேர்ந்த சேவுகமூர்த்தி மனைவி பிச்சையம்மாள். கணவர் மனைவி தகராறில் பிச்சையம்மாள் தற்கொலை. பிச்சையம்மாள் சாவில் மர்மம் இருப்பதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை & கொலை | தமிழ்சுடர் |
| 897. | 20.3.2010 | **தேனி மாவட்டம்:** சமதர்மபுரம் பகுதியைச் சேர்ந்த முருகேசன் மகள் லாவண்யா தனியார் பள்ளியில் பிளஸ்–1 படித்து வந்தார். தேர்வு சரியாக எழுதாதால் மனமுடைந்த லாவண்யா தீக்குளித்துத் தற்கொலை. | குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | தீக்கதிர் |